பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**16 08 2026** **SUNDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** விவசாயிகள் நலனுக்காக எண்ணற்றத் திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

**2.** இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தின்கீழ், இதுவரை **8** கோடியே **25** லட்சத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்று, அது தொடர்பான புகைப்படத்தை இணையதளத்தில் பதிவேற்றம் செய்துள்ளனர்.

**3.** ஹங்கேரியில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் **12** பேர் உயிரிழந்தனர்.

**4.** வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளது.

**5.** **20** வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டி **Slovakia**-வின் **Bratislava**-வில் இன்று தொடங்கியது.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<>>>>>>>

விவசாயிகள் நலனுக்காக எண்ணற்றத் திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் **Alwar**-ல் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

விவசாயிகள் நலனுக்காக மத்திய அரசு செயல்படுத்திவரும் திட்டங்களை அவர் பட்டியலிட்டார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதற்கு ஏழைகள், இளையோர், மகளிர் மற்றும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் மேம்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்று அவர் குறிப்பிட்டார்.

இதனை கருத்தில்கொண்டு இதற்கான திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாகவும் திரு அமித் ஷா கூறினார்.

<<<<<>>>>>>>

சுகாதாரத்துறையில் இந்தியா விரைவான வளர்ச்சியை கண்டு வருவதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், ஊரகப்பகுதிகளிலும் சர்க்கரை நோயினால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதை சுட்டிக்காட்டினார்.

இதனை தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

புதுமை கண்டுபிடிப்புகளிலும், அறிவியல் ஆராய்ச்சிகளிலும் இந்தியா சிறந்து விளங்குவதாக அவர் தெரிவித்தார்.

இதன் பலன்கள் நாட்டு மக்கள் அனைவரையும் சென்றடைய வேண்டியது அவசியம் என்றும் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<<>>>>>>>

பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்குப்பதிவு சதவீதம் வெகுவாக அதிகரித்ததற்கு, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளே காரணம் என்று தலைமை தேர்தல் ஆணையர் திரு **Gyanesh Kumar** கூறியுள்ளார்.

பாட்னா விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பீகார் சட்டப்பேரவைத் தேர்தல் அமைதியாக நடைபெற்றதையும் சுட்டிக்காட்டினார்.

இந்த தேர்தலில் பதிவான வாக்குகள் சதவீதம் அமெரிக்கா, ஸ்பெயின், இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜப்பான் நாட்டு தேர்தல்களில் பதிவான வாக்குகளைவிட கூடுதல் என்று திரு **Gyanesh Kumar** கூறினார்.

<<<<<>>>>>>>

ஆந்திர மாநிலம் குண்டூரில் உள்ள மண்டல அரசு நூலகத்திற்கு **20** கோடி ரூபாய் செலவில் அதிநவீன வசதியுடன் கூடிய புதிய கட்டிடம் கட்டப்பட உள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் பெம்மசானி சந்திரசேகர் கூறியுள்ளார்.

இன்று குண்டூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்த நூலகம் பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் **1915-**ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

தற்போது பழமையான கட்டிடத்தில் இயங்கிவரும் இந்த நூலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கான ஒப்பந்தம் இன்று கையெழுத்திடப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கான கட்டுமானப்பணிகள் விரைவில் தொடங்கும் என்றும் டாக்டர் பெம்மசானி சந்திரசேகர் கூறினார்.

<<<<<>>>>>>>

புதுதில்லியில் உள்ள காங்கிரஸ் தலைமையகத்தில் வந்தே மாதரம் பாடலை முழுமையாக இசைப்பதற்கு அக்கட்சியின் முன்னாள் தலைவர் திருமதி சோனியாகாந்தி எதிர்ப்பு தெரிவித்தது கண்டனத்திற்குரியது என்று மேற்குவங்க முதலமைச்சர் திரு சுவேந்து அதிகாரி கூறியுள்ளார்.

கொல்கத்தாவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், காங்கிரஸ் தலைமையகத்தில் சுதந்திர தினத்தையொட்டி நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் வந்தே மாதரம் பாடல் முழுமையாக இசைக்கப்படாததை சுட்டிக்காட்டினார்.

இந்த செயல் தேசியவாதத்திற்கு எதிரானது என்று திரு சுவேந்து அதிகாரி கூறினார்.

இதற்கிடையே, இந்த குற்றச்சாட்டை காங்கிரஸ் கட்சி மறுத்துள்ளது.

காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கேவுக்கு இருக்கை வழங்குமாறுதான் திருமதி சோனியாகாந்தி அறிவுறுத்தியதாகவும், இது தவறாக புரிந்துகொள்ளப்பட்டதாகவும் காங்கிரஸ் கட்சி கூறியுள்ளது.

<<<<<>>>>>>>

ஜம்மு காஷ்மீரில் அமைதியை பராமரிக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா கூறியுள்ளார்.

ஜம்முவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், அமைதியை சீர்குலைக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளை பாதுகாப்புப்படையினர் முறியடிப்பார்கள் என்று தெரிவித்தார்.

இதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் திரு மனோஜ் சின்ஹா கூறினார்.

<<<<<>>>>>>>

தில்லி மேம்பாட்டு ஆணையத்தின் வீட்டுவசதித் திட்டத்திற்கு பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது.

இந்த திட்டத்தில் அடுக்குமாடி குடியிருப்புகளின் 50 சதவீதம் முதல் நாளிலேயே விற்பனையாகியுள்ளன.

குறிப்பாக, ஒரு படுக்கை அறை கொண்ட வீடுகள் ஒரு சில மணி நேரங்களிலேயே முழுமையாக விற்பனையாகியுள்ளன.

அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வுபெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கென இந்த வீட்டுவசதி திட்டத்தை தில்லி மேம்பாட்டு ஆணையம் கொண்டுவந்துள்ளது.

<<<<<>>>>>>>

தெலங்கானாவில் உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து கட்டுப்பாட்டுத் துறைகளை அம்மாநில அரசு ஒருங்கிணைத்துள்ளது.

இதன்படி, தெலங்கானா உணவு தர ஆணையம் மற்றும் அத்தியவசிய மருந்துகள் என்ற துறை உருவாக்கப்பட்டுள்ளது.

உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து கட்டுப்பாடு தொடர்பான நெறிமுறைகளை ஆய்வு செய்து பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கென மாநில அளவிலான குழு அமைக்கப்படும் என்றும் தெலங்கானா அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<>>>>>>>

நாடு முழுவதும் நடைபெற்றுவரும் இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தின்கீழ் இன்று ஹரியானா மாநிலம் கர்னாலில் இதுதொடர்பான பேரணியை மத்திய அமைச்சர் திரு மனோகர்லால் தொடங்கிவைத்தார்.

ஏராளமானோர் இதில் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதேபோல், அம்மாநிலத்தின் **Ballabgarh**-ல் இந்த இயக்கத்தின்கீழ் நடைபெற்ற பேரணியை மத்திய இணையமைச்சர் திரு **Krishan Pal Gurjar** தொடங்கிவைத்தார்.

ஆயிரக்கணக்கானோர் இதில் பங்கேற்றதோடு வந்தே மாதரம் பாடலையும் பாடினர்.

கடந்த ஒன்பதாம் தேதி தொடங்கிய இந்த இயக்கம், நாளை வரை நடைபெறவுள்ளது.

இதற்கிடையே, இந்த இயக்கத்தின்கீழ் நாடு முழுவதும் 8 கோடியே 25 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்று, அது தொடர்பான புகைப்படத்தை இணையதளத்தில் பதிவேற்றம் செய்துள்ளதாக கலாச்சாரத்துறை கூறியுள்ளது.

<<<<<>>>>>>>

இணைய பாதுகாப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் தொடர்பான தேசிய அளவிலான Hackathon தற்போது நடைபெற்று வருகிறது.

அடுத்த மாதம் 10-ஆம் தேதிவரை இதற்கான பதிவு நடைபெறும் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மாணவர்களும், ஆய்வாளர்களும் இதில் பங்கேற்கலாம் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெற்றிபெறுபவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>>

ரஷ்யா மீது யுக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதலில் ஆறு பேர் உயிரிழந்தனர்.

**Rostov** மண்டலத்துக்கு உட்பட்ட மூன்று நகரங்களை குறிவைத்து யுக்ரைன் இந்த தாக்குதலை நடத்தியது.

**150**-க்கும் மேற்பட்ட ட்ரோன்கள் இதற்காக பயன்படுத்தப்பட்டதாக யுக்ரைன் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, யுக்ரைனின் **800**-க்கும் மேற்பட்ட ட்ரோன்கள் அழிக்கப்பட்டுள்ளதாக ரஷ்யா கூறியுள்ளது.

யுக்ரைன் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், ரஷ்யா ஏவுகணை தாக்குதலை நடத்தியது.

இந்த தாக்குதலில் மூன்று பேர் உயிரிழந்தனர்.

கீவ் மற்றும் இதர பகுதிகளை குறிவைத்து இந்த தாக்குதலை ரஷ்யா நடத்தியது.

<<<<<>>>>>>>

இந்தோனேஷியாவில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட கிழக்கு **Nusa Tenggara** மாகாணத்தில் **14** நாள் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இந்த உத்தரவு இம்மாதம் **28**-ஆம் தேதிவரை அமலில் இருக்கும் என்று அந்நாட்டு பேரிடர் மேலாண்மை முகமையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த நிலநடுக்கம் காரணமாக பல்வேறு பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட்டதாகவும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகள் நடைபெற்று வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>>

ஹங்கேரியில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் **12** பேர் உயிரிழந்தனர். **10** பேர் காயமடைந்தனர்.

**Budapest** அருகே சென்று கொண்டிருந்த பேருந்து, நிலை தடுமாறி அருகில் இருந்த கால்வாயில் விழுந்ததில் இந்த விபத்து நேரிட்டதாக அந்நாட்டு காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<<>>>>>>>

வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளது.

இதன்காரணமாக, மேற்குவங்கம், ஒடிஷா, சத்தீஸ்கர் மற்றும் ஜார்கண்ட் மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு

தினங்களுக்கு கனமுதல், மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேசம், மேகாலயா, அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களின் ஒரு சில பகுதிகளில் அடுத்த நான்கு தினங்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, ஒடிஷாவில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

<<<<<>>>>>>>

இந்நிலையில், அஸ்ஸாமில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்கப்படும் என்று அம்மாநில அமைச்சர் திரு **Pijush Hazarika** கூறியுள்ளார்.

**Jorhat-**ல் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், தோட்டக்கலை பயிர் மேம்பாட்டிற்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றார்.

இதற்கென ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<>>>>>>>

**20** வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டி **Slovakia**-வின் **Bratislava**-வில் இன்று தொடங்கியது.

வரும் **23**-ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இப்போட்டியில், இந்தியாவின் சார்பில் **Hariom, Suraj, Aditya, Akshya Rana** உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

---------------

இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று ஆட்ட நேர இறுதியில் இந்தியா முதல் இன்னிங்சில் **9** விக்கெட் இழப்பிற்கு **460** ரன் எடுத்துள்ளது,

**Galle**-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியில், **Devduttv Padikkal** அபாரமாக ஆடி **167** ரன் குவித்தார்.

குல்தீப் யாதவ் **12** ரன்னுடனும், **Prasidh Krishna** ஒரு ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

இன்றைய ஆட்டம் மழையினால் தாமதமாக தொடங்கியது.

**<<<<<END>>>>>**